இணைப்பு— I

243 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 229-க்கான விடையைக் காண்க.)

(அ) பாதிக்கு மேல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. முழுப் பணிகள் இன்னும் நிறைவேறவில்லை. 1986-87 ஆம் ஆண்டு இறுதிக்குள் எல்லாப் பணிகளையும் முடித்துவிட திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) தற்போது பூங்காவில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் மிருகம் மற்றும் பறவை வகைகள் உள்ளன :—

	வகை	எண்ணிக்கை.
(1) பாலூட்டிகள்	45	294
(2) பறவைகள்	69	340
(3) ஊர்வன	12	61

(உ) மற்றும் (எ) :—

மினி இரயில் விட உத்தேசம் இல்லை. எனினும், பார்வையாளர்கள் பூங்காவைச் சுற்றிப் பார்க்க 4 மின்கலத்தால் இயங்கும் ஊர்திகள் (Battery operated two-cars) வாங்கி விடப்பட்டுள்ளன. பூங்காவினுள் தனியார் வாகனங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பார்வையாளர்கள் நடந்து சென்று சுற்றிப் பார்க்கச் சாலைகளும் நடைபாதைகளும் போடப்பட்டுள்ளன.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு— II

249 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 177-க்கான விடையைக் காண்க.)

கரும்புதான் வெல்லப்பாகு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள் கடந்த ஆண்டுகளில் பருவமழை தவறியதால் கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. வெல்லம் அதிகம் விலை போவதால், கணிசமான அளவு கரும்பு ; வெல்லம் காய்ச்ச திருப்பப்படுகிறது. அதனால் வெல்லப்பாகின் உற்பத்தியும் இந்த ஆண்டு குறைந்துள்ளது. இது தவிர, சர்க்கரை ஆலைகள் சர்க்கரை எடுக்கும் திறனை அதிகப்படுத்தியுள்ளதால், வெல்லப்பாகிலிருக்கும் சர்க்கரை நிலுவை சதவீதமும் ஓரளவு குறைந்து வருகிறது.

1986 ஏப்ரல் 30]

(உ) இதைப்போக்க, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

பற்றாக்குறையை போக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது:—

(1) சுத்திகரிக்கப்பட்ட எரிசாராயத்தை வெளிநாடுகளிலிருந்து 30—11—1985 வரை எவ்வித கலால் வரியும் விதிக்கப்படாமல் இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(2) மரவள்ளிக்கிழங்கிலிருந்து எரிசாராயத்தை தயாரிக்க முன்வந்துள்ள உற்பத்தி ஆலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(3) பற்றாக்குறை நீங்கும்வரை இருப்பில் உள்ள வெல்லப்பாகு பலநிலை உபயோகிப்போருக்கு சீராக, கட்டுப்பாட்டோடு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(4) வெல்லப்பாகை தவறான வழியில் பயன்படுத்தாதவண்ணம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

இணைப்பு—III

[258 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பு

தமிழ் நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றம்.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்" என்ற தலைப்பின் கீழ் 1986-87 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31-ல் நாற்பத்தேழு கோடியே எண்பத்தொன்பது லட்சத்து நாற்பத்து நான்காயிரம் ரூபாய் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச்சட்டமன்ற பேரவையினை வேண்டுகிறேன்.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மானியக் கோரிக்கையின் மீது அரசின் கொள்கை விளக்கத்தை இப் பேரவையில் நான் எடுத்து கூறும் முன், அவர்களுக்காக பல்வேறு துறைகள் மூலம் அரசு எடுத்த சமூக, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளைப் பற்றி கூற விழைகிறேன்.

3. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேர். இது மொத்த மக்கட் தொகையில் 18.35 விழுக்காடு ஆகும். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இது இம்மாநிலத்தில் மொத்த மக்கட்